[1969 ஆகஸ்ட் 19

மாடியில் உள்ளவர்கள் தண்ணீருக்கு மிகுந்த சிரமப்படுகிறார்கள். ஆகவே விட்டுவசதி வாரியம் பெரிய கிணறுகளை எடுத்து மாடியில் உள்ளவர்களுக்கும் தண்ணீர் கிடைக்கும்படியாக பம்பு வைத்து இறைக்க தக்க ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : இப்போது தனியாகக் கிணறு வெட்டி, விசையேற்றம் வைத்து குழாய்கள் மூலமாக மற்ற காரியங்களுக்கு வேண்டிய தண்ணீர் தாராளமாக அளிக்கப் படுகிறது. குடிப்பதற்கு ஏற்ற தண்ணீர் மட்டும் தான் இப் போது இரண்டு லைன்கள் மூலமாக அளிக்கப்படுகிறது. மேலே தேக்கி வைத்து கொடுப்பது என்றால் ஒரு லைன் மூலமாகத்தான் அளிக்க முடியும். அப்போது இதைவிட கஷ்டம் ஏற்படும். பொதுவாக குடிதண்ணீர் பிரச்னை எல்லா இடங்களிலுமே இருக் கிறது. ஸோனல் ஸிஸ்டம் ஏற்படுத்தி தண்ணீர் சப்ளை செய்தா லொழிய தண்ணீர் கஷ்டம் தீருவது என்பது முடியாத நிலை மையில் இருக்கிறது.

திரு. கே. விநாயகம் : லாயிட்ஸ் ரோடில் உள்ள ஹவுசிங் போர்டு காலனி மட்டும் என்ன—சைதாப்பேட்டையில் உள்ள டாட்டண்டர் நகர் காலனியிலும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது ஹவுசிங் போர்டு கீழே வருகிறதா, பி.டபிள்யூ.டி.யின் கீழே வருகிறதா ?

திரு. கே. விநாயகம் : பி.டபிள்யூ.டி.யின் கீழ் இருக்கும் காலனிக்குப் பின்னால் ஹவுசிங் போர்டு காலனி இருக்கிறது. நான் தெரிந்தே சொல்கிறேன். ஒரு வீட்டில் இருக்கிற தண்ணீரை பைப் மூலமாக அதிகாரம் இல்லாது பக்கத்துவீட்டில் இருப்பவர்கள் எடுத்துக் கொள்கிறார்கள் என்ற புகார் வந்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : அந்தமாதிரியான தகவல் என்னிடம் இல்லை.

Accounts of Sri Kapaleeswarar Devasthanam

* 30. *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state :

(*a*) whether any defalcation in the accounts of Sri Kapaleeswarar Devasthanams, Mylapore, Madras, has been reported during 1966-67 ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) இல்லை.

(இ) இவ் வினாவிற்கு இடமில்லை.

1969 ஆகஸ்ட் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளி குறி (*) இடப்பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.)

* * * * *

(காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

2 பேரவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து சில பகுதிகளை நீக்குவது குறித்து

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப் போன்று பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் ஆரம்பித்த விவாதத்தில் இருக்கிற எல்லாச் சொற்களையும் சட்டமன்ற நடவடிக்கைப் புத்தகத்திலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பொழுது நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுடைய ஒற்றிவைப்புத் தீர்ப்புத் தீர்மானத்தை நிராகரித்தது குறித்து அவர் ஆரம்பித்த விவாதத்திலிருந்து அவர்கள் வெளியேறியது வரையிலும் நடந்த நிகழ்ச்சிகளைப்பற்றிய குறிப்புகளை சட்டமன்றக் குறிப்புப் புத்தகத்திலிருந்து நீக்கிவிட ஆணையிடுகிறேன். பத்திரிகைக்காரர்களும் அவற்றை வெளியிட வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

3 ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்

• (i) மதுரை மாவட்டத்தில் நிலவும் பஞ்ச நிலை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திரு. சித்தன் அவர்கள் ஒற்றிவைப்புத் தீர்மானம் ஒன்றைக் கொடுத்து இருக்கிறார்கள். அதில்

"To discuss the acute famine conditions prevailing in areas in and around Madurai district leading to mass evacuation and starvation death".

என்று சொல்லியிருக்கிறார்கள். இது அரசினுடைய அன்றாட நிர்வாகத்தில் இருக்கிற ஒன்றாகும். மேலும் வருகின்ற நிதி நிலை அறிக்கையின்மீது உறுப்பினர்கள் கருத்துக்களை வழங்கு வதற்கு வாய்ப்பு இருக்கிறது, எனவே இதற்கு அனுமதி மறுக்கிறேன்.

** பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பட்டது.